Ph : 04175 - 236654 | 235295

# SHANMUGA INDUSTRIES
# ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO - 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

08.03.2021

## திருவண்ணாமலை சண்முகா கல்லூரியில்
## உலக மகளிர் தின விழா

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் உலக மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது. திருவண்ணாமலை மாவட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் **டி.வி.கிரண் ஸ்ருதி** அவர்கள் கலந்து கொண்டு விழாப் பேருரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சிக்குக் கல்லூரியின் தலைவர் **ஜி.புல்லையா** தலைமை தாங்கினார். கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து** முன்னிலை வகித்தார். பொருளாளர் **எம்.சீனுவாசன்**, அறக்கட்டளை உறுப்பினர்கள் திருமதி.**என்.ராதாபாய்**, திருமதி.**எஸ்.கஸ்தூரி,** திருமதி.**எம்.மணிமொழி முத்துசாமி**, திருமதி.**எம்.இராஜகுமாரி**, திருமதி.**பி.கலைமணி,** திருமதி.**குமுதாஅருணகிரி** திருமதி.**சி.சசிகலா, கே.அருள்விழி**, திருமதி.**எஸ்.தமிழரசி**, திருமதி.**பி.அருணாதேவி** மற்றும் கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக, கல்லூரி முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** வரவேற்புரையாற்றினார். மின்னணுவியல் துறைத்தலைவர் திருமதி.**ஜி.சரளா,** உயிர்வேதியியல் துறைத்தலைவர் திருமதி.**எம்.சுதா** மற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியை திருமதி.**ஆ.பியூலா சுசீலா** நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்தனர். தமிழ்த்துறை முதுகலை இரண்டாமாண்டு மாணவி **கமலீஸ்வரி** நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்கினார்.

இவ்விழாவில் திருவண்ணாமலை மாவட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் **டி.வி.கிரண் ஸ்ருதி** அவர்கள் கலந்துகொண்டு, "மாணவிகள் ஒழுக்கத்துடனான கல்வி கற்று மன உறுதியுடன் முயற்சித்தால் வெற்றி பெறலாம் என எடுத்துரைத்தார். குறிக்கோலை அடைவதற்குத் திட்டங்களை வகுத்து செயல்பட வேண்டுமென்றும், வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். தோல்வி வந்தால் துவண்டு போகாமல் மீண்டும் மீண்டும் முயற்சி செய்து வெற்றி அடைய வேண்டும் என்றும் உரையாற்றி பல்வேறு சான்றுகளை எடுத்துக்காட்டி பேசினார். அலைபேசியைத் தேவைக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டார்".

தொடர்ந்து மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சியின் நிறைவில் தமிழ்த்துறை முதுகலை இரண்டாமாண்டு மாணவி **ரஞ்சனி** நன்றியுரையாற்றினார்.

இவ்விழாவில் அறக்கட்டளை உறுப்பினர்கள், கல்லூரிப் பேராசிரியைகள், அலுவலகப் பணியாளர்கள், மற்றும் மாணவிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.

**செயலர் மற்றும் தாளாளர்**


சண்முகா தொழிற்சாலை
கலை அறிவியல் கல்லூரி
பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா - மகாகவி பாரதியார்
மார்ச் 8 உலக மகளிர் தின விழா -2021
24